# மகிழ்ச்சி

**MAGIZHCHI MAGAZINE**

**MAY 2026**




**C.S.I. TAMIL CHURCH SHARJAH**
The United Arab Emirates,
Mob : 0507032150 / website : www.csitamilsharjah.com
For Private Circulation Only

# இதழின் உள்ளே...


| | |
|---|---|
| ஆயர் மடல் | 3 |
| செயலர் மடல் | 6 |
| திருமறைத் தியானம் | 10 |
| His Presence | 13 |
| இனிய இல்லறம் | 15 |
| Church History | 18 |
| திருமறையைத் தெரிந்துகொள்வோம் | 20 |
| Kids Corner | 23 |
| Birthday & Wedding Anniversary Celebrants | 25 |
| Daily Bible Reading | 28 |
| வழிபாட்டுத் தியானப் பொருள் | 29 |


THAT THEY ALL MAY BE ONE
CHURCH OF SOUTH INDIA



# From the Presbyter's Desk

கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே,

நம்முடைய ஆண்டவரும் இரட்சகருமான இயேசு கிறிஸ்துவின் விலையேறப்பெற்ற நாமத்தில் உங்களுக்கு வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த மே மாதத்திற்குள் நாம் அடியெடுத்து வைக்கும் வேளையில், கடந்த மாதம் நம்மை வழிநடத்திய இறைவாக்கினை தியானிக்க உங்களை அழைக்கிறேன்:

“தேவரீர் சகலத்தையும் செய்ய வல்லவர்; நீர் செய்ய நினைத்தது தடைபடாது என்பதை அறிந்திருக்கிறேன்” (யோபு 42:2).

நிச்சயமாகவே, நம்முடைய உண்மையுள்ள தேவன் நம்மிடையே அனைத்தையும் பரிபூரணமாகச் செய்திருக்கிறார். குறிப்பாக நமது புனித வெள்ளி மற்றும் ஈஸ்டர் ஆராதனைகளின் போது அவருடைய வல்லமையுள்ள கரத்தை நாம் கண்டோம். இரண்டு ஆராதனைகளும் மிகுந்த ஆசீர்வாதமாகவும், ஆவிக்குரிய எழுச்சியுடனும், ஆழமான தாக்கத்தை ஏற்படுத்துவதாகவும் அமைந்தன. சவாலான சூழ்நிலைகளிலும் நம்முடைய திருச்சபை தொடர்ந்து வளர்ந்து வருவதைக் காண்பது மிகுந்த மகிழ்ச்சி அளிக்கிறது. இந்த ஆண்டு இரண்டாவது ஈஸ்டர் ஆராதனையை

நடத்த நாம் வழிநடத்தப்பட்டோம். இரண்டு ஆராதனைகளிலும் சபையினரின் உற்சாகமான பங்கேற்பைக் கண்டது மனதிற்கு நெகிழ்ச்சியாக இருந்தது.

ஏப்ரல் மாதத்தில், நமது இரண்டாவது ஆராதனையாக வெள்ளிக்கிழமை மாலை 8:00 மணிக்கு திருவிருந்து ஆராதனையைத் தொடங்கினோம். இத்துடன், முகாம் ஊழியங்கள் (Camp Ministry), உபவாச ஜெபம், சங்கிலி ஜெபம் மற்றும் பதினைந்து முன் இரவு ஜெபக் கூட்டங்கள் என அனைத்து வழக்கமான ஊழியங்களும் மிகச் சிறப்பாக நடத்தப்பட்டு பலருக்குப் பெரிய ஆசீர்வாதமாக அமைந்துள்ளன.

மே மாதத்தில் நுழையும் நாம், வரும் மே-3, ஞாயிற்றுக்கிழமை மாலை ஆராதனைக்குப் பிறகு நடைபெறவுள்ள நமது ஆண்டு பொதுக்குழு கூட்டத்தை (AGM) ஆவலுடன் எதிர்பார்க்கிறோம். இது 2025-2026 - ஆம் ஆண்டிற்கான நமது ஊழியங்கள் மற்றும் பணிகளின் நிறைவைக் குறிக்கிறது. இது நன்றியறிதலுக்கும் சிந்திப்பதற்குமான ஒரு தருணமாகும்.

இந்த வேளையில், நமது திருச்சபை கமிட்டி செயலாளர் திரு.சுரேஷ் பிச்சைமணி அவர்களுக்கு எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். அவருடைய சளைக்காத உழைப்பு, அசைக்க முடியாத அர்ப்பணிப்பு மற்றும் ஊழியத்தில் என்னோடு தோளோடு தோள் நின்று பணியாற்றியதற்காகவும் நான் நன்றி கூறுகிறேன். தரிசனங்களை ஏற்றுக்கொண்டு, கருத்துக்களைச் செயலாக மாற்றுவதில் அவர் காட்டிய ஆர்வம் நமது சபையின் வளர்ச்சிக்கு பெரிதும் உதவியுள்ளது.

திருச்சபையின் நிதி நிலைமையை மிகுந்த திறமையுடனும் வெளிப்படைத்தன்மையுடனும் நிர்வகித்த நமது திருச்சபை கமிட்டி பொருளாளர் திரு. டார்வின் ராஜபாண்டியன் அவர்களுக்கும் எனது மனமார்ந்த பாராட்டுகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். கணக்குகளை சரியான நேரத்தில் முடித்து, முறையாகத் தணிக்கை செய்து, பொதுக்குழு ஒப்புதலுக்குத் தயார் செய்வதை அவரது அர்ப்பணிப்பு உறுதி செய்தது.

நமது அர்ப்பணிப்புள்ள கமிட்டி உறுப்பினர்களான திரு.குளோரிதாஸ், திரு.மகேஷ், திரு.ஹென்றி, திரு.ஜோஸ் மற்றும் திரு.பால் டெனிசர் ஆகியோரின் விசுவாசமான சேவைக்கும் ஆதரவிற்கும் எனது நன்றிகள் உரித்தாகட்டும்.

நமது அன்பிற்குரிய திரு.பால் டெனிசர் அவர்கள், தனது குடும்பத்தினருடன் இருப்பதற்காகச் நமது சொந்த நாட்டிற்குத் திரும்புவதால், கனத்த இதயத்துடன் அவரை வழிஅனுப்பி வைக்கிறோம். நமது சபையின் வளர்ச்சியில்

அவருடைய சேவைக்காக உள்ளத்தின் ஆழத்திலிருந்து நன்றி கூறுகிறோம், மேலும் இந்த பயணத்தில் இறைவனின் அபரிமிதமான ஆசீர்வாதங்கள் அவருக்கும் அவரது குடும்பத்திற்கும் கிடைக்க வாழ்த்துகிறோம்.

இச்சபையின் போதகராக நான் ஓராண்டை நிறைவு செய்யும் வேளையில், இறைவனுக்கு ஆழ்ந்த நன்றியுடன் திரும்பிப் பார்க்கிறேன். நாம் மேற்கொண்ட ஊழியங்கள் உயிரோட்டமுள்ளதாகவும், ஆவிக்குரிய வல்லமை நிறைந்ததாகவும், அவருடைய நாமத்திற்கு மகிமை சேர்ப்பதாகவும் அமைந்தன. உங்கள் அனைவரிடமிருந்தும் நான் பெற்ற அன்பு, அக்கறை மற்றும் ஊக்கம் என்னைப் பிரமிக்க வைத்தது. இறை வார்த்தை உங்கள் வாழ்க்கையை எவ்வாறு தொட்டது என்பது குறித்து நீங்கள் பகிர்ந்த கருத்துக்களும் சாட்சிகளும் பலமுறை என் கண்களில் ஆனந்தக் கண்ணீரை வரவழைத்தன.

ஒரு காலத்தில் தகுதியற்றவனாகவும், தேவையற்றவனாகவும் உணரப்பட்ட ஒரு பாத்திரத்தைத் தேர்ந்தெடுத்து, இன்று தனது மகத்தான ஊழியத்திற்காகப் பயன்படுத்தி வரும் இறைவனுக்குப் பணிந்து நன்றி கூறுகிறேன்இது முற்றிலும் அவருடைய கிருபையே. கிறிஸ்துவின் அன்பிற்கும் கிருபைக்கும் நான் என்றும் கடமைப்பட்டிருக்கிறேன்.

முழு திருச்சபை குடும்பத்திற்கும் உங்கள் அன்பு, அக்கறை மற்றும் ஆதரவிற்காக எனது இதயப்பூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். கிறிஸ்துவின் சரீரத்தைக் கட்டியெழுப்புவதில் உண்மையான பங்கேற்புடனும் அர்ப்பணிப்புடனும் செயல்படும் நமது ஞாயிறு பள்ளி, ஐக்கியக் குழுக்கள், பாடகர் குழு மற்றும் ஜெபக் குழுக்கள் என அனைவரையும் நான் மனதாரப் பாராட்டுகிறேன்.

எதிர்வரும் ஆண்டில் தேவன் நமக்காக வைத்திருப்பவற்றை மிகுந்த எதிர்பார்ப்புடன் எதிர்நோக்குகிறோம். நம்மிடையே நற்கிரியையைத் தொடங்கியவர் அதை முடிவுபரியந்தம் நடத்துவார் என்ற நம்பிக்கையுடன், விசுவாசத்திலும், ஒற்றுமையிலும், சேவையிலும் தொடர்ந்து வளருவோமாக.

ஆண்டவர் உங்களை நிறைவாக ஆசீர்வதிப்பாராக.

இறைபணியில் உங்கள் ஆயர்
அருள்திரு. A.F.ஆமோஸ் இலாசரஸ்
☎ +971 50 703 2150
e-mail : tamilchurchcsisharjah@gmail.com



# செயலர் மடல்

கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே, ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் ஈடு இணையற்ற நாமத்தில், உங்கள் அனைவருக்கும், அன்பின் வாழ்த்துதலை, தெரிவித்துக் கொள்கிறோம்.

கடந்த ஏப்ரல் மாதம் முழுவதும், மிகவும் பதட்டமான போர் சூழலிலும். இயற்கை சீற்றத்திலும், நம்மையும் நம் குடும்பத்தினரையும், பாதுகாத்து, இந்த புதிய மே2026 மாதத்தையும் காண கிருபை செய்ததற்காக, ஆண்டவருக்கு நன்றிகளையும், துதிகளையும் ஏறெடுக்கிறோம்.

கடந்த மாதம் முழுவதும் நமது சபையின் நிகழ்வுகள் அனைத்தையும், நேர்த்தியும் கிரமமுமாக நடத்த கிருபை செய்த ஆண்டவருக்கு நன்றிகளை ஏறெடுக்கிறோம். சபையின் எல்லா நிகழ்வுகளுக்குப் பின்னும் பல தன்னார்வ தொண்டர்களின் அயராத உழைப்பும் அர்ப்பணிப்பும் உள்ளது, இதற்காக கர்த்தரை துதிக்கிறேன. தேவன் தாமே அவர்களை கனப்படுத்தி ஆசீர்வதிப்பாராக.

மே மாதத்திற்கான, சபையின் நிகழ்வுகள் அனைத்தும் கர்த்தருடைய சித்தத்தின் படி சிறப்பாக நடக்கவும், இவை அனைத்தையும், நடத்தவிருக்கிற நமது ஆயர் அருட்பணி கி.தி. ஆமோஸ் லாசரஸ் ஐயா அவர்களுக்கும், அவர்களோடு இணைந்து செயல்படவிருக்கிற, பொறுப்பாளர்கள், தன்னார்வலர்களுக்கும் ஆண்டவர் தாமே, சுகம், பெலன், ஞானம், அருள்வாராக.

## சபையின் விதிமுறை குறித்த அறிவிப்பு

நமது சபை அங்கத்தினர்களின் வாக்குரிமைக்கான தகுதி, கீழ கொடுக்கப்பட்டுள்ள, நமது சபையின் மூலச் சட்டங்கள், SYNOD மாமன்றத்தின் மூலச் சட்டங்கள், மற்றும் பொதுக்குழு கூட்டத்தின் முடிவுகளின் படி வரையறுக்கப்பட்ட ஆறு தகுதிகளின், அடிப்படையில் இறுதி செய்யப்பட்டுள்ளது. அவை முறையே.

1.) வயது வரம்பு: 31/03/2026 தேதியின்படி 21 வயது பூர்த்தியடைந்திருக்க வேண்டும்.

2.) திருமண நிலை: திருமணமானவராக இருந்தால், அவரது துணைவர் (Spouse) தென்னிந்திய திருச்சபையுடன் (CSI) ஐக்கியத்திலுள்ள ஒரு திருச்சபையைச் சேர்ந்தவராக இருக்க வேண்டும்.

3.) நிதி நிலை: வருடாந்திர சந்தா தொகையான AED 180/Member ஐ 31/03/2026 அன்றோ அல்லது அதற்கு முன்போ செலுத்தியிருக்க வேண்டும்.

4.) திருவிருந்து பங்கேற்பு: திருச்சபையின் நிதி ஆண்டிற்குள் (01/04/2025 முதல் 31/03/2026 வரை) குறைந்தது மூன்று (3) முறை திருவிருந்தில் பங்கேற்றிருக்க வேண்டும்.

5.) குடியிருப்பு நிலை: 31/03/2026 தேதியின்படி முறையான குடியிருப்பு விசா (Valid Residence Visa) பெற்றிருக்க வேண்டும்.

6.) நிலுவையிலுள்ள அறுவடைத் திருவிழா மற்றும் இதர பாக்கிகள்:

2024 ஆம் ஆண்டு அறுவடைத் திருவிழா பாக்கிகள் மற்றும் இதர பாக்கிகள் (சந்தா/புத்தகங்கள் வாங்கியது போன்றவை) அனைத்தையும், 2025ஆம் ஆண்டு அறுவடைத் திருவிழா நாளன்றோ அல்லது அதற்கு முன்போ முழுமையாகச் செலுத்தி முடித்திருக்க வேண்டும்.

## திருச்சபை உறுப்பினர் விண்ணப்பத்திற்கான தகுதிகள்

அன்பார்ந்த திருச்சபை மக்களே,

நமது திருச்சபையில் புதிய உறுப்பினர்களாகச் சேர விண்ணப்பிப்பவர்களுக்கான நடைமுறைகள் குறித்து இந்த அறிவிப்பு வெளியிடப்படுகிறது.

நமது ஆலயத்தின் அடிப்படை உறுப்பினர் ஆக நமது மூலச் சட்டத்தின்படி (As per the constitution) கீழ்க்கண்ட தகுதிகள், இன்றியமையாததாகிறது. அவைகள் முறையே,

1) தென்னிந்திய திருச்சபை அல்லது தென்னிந்திய திருச்சபையின் ஐக்கியத்தில் உள்ள எந்த ஒரு திருச்சபையிலோ, பிதா, சுதன், பரிசுத்த ஆவின் நாமத்தினாலே. தண்ணீர் மூலமாக, திருமுழுக்கு பெற்றவர்களா இருக்க வேண்டும்.

2) சிஎஸ்ஐ அல்லாத எந்த ஒரு கிறிஸ்தவ அமைப்பில் உறுப்பினர் அல்லாதவராகவும்.

3) சிஎஸ்ஐ சட்ட விதிகளின் புறம்பாக்கலால், புறம்பாக்கப்படாதவராகவும்.

4) தென்னிந்திய திருச்சபையின் எந்த ஒரு பேராயத்திலோ அல்லது தென்னிந்திய திருச்சபை. ஐக்கியத்தில் உள்ள எந்த ஒரு திருச்சபையிலோ தகுதி நீக்கமோ / புறம்பாக்கப்பட்டவராகவோ அல்லாமலும், இருக்க வேண்டும்.

விண்ணப்பதாரர், மேலே குறிப்பிடப்பட்டுள்ள நான்கு தகுதியையும் பெற்றிருக்கிறார் என்பதை உறுதி செய்வதற்காக, CSI திருச்சபைகள் அனைத்திலும் பின்பற்றப்படும் நடைமுறையின் அடிப்படையிலேயே, உங்கள் முந்தைய சபையிலிருந்து / தாய் சபையிலிருந்து கடிதம் கொண்டு வருமாறு நாங்கள் கேட்டுக்கொள்கிறோம்.

அதாவது, தாங்கள் முன்பு இருந்த சபை / தாய் சபையின் போதகரிடமிருந்து ஒரு பரிந்துரை கடிதத்தில் (formal letter of recommendation) அல்லது இடமாற்றச் சான்றிதழில் (transfer certificate) நீங்கள் அந்த சபையின் முழு உரிமை பெற்று, திருவிருந்தில் பங்குபெறுபவராக இருக்கிறீர்கள் என்பதை எழுதி, குறுஞ்செய்தி / மின்னஞ்சல் மூலமாகவோ அல்லது whatsapp செய்தியாகவோ நமது திருச்சபைக்கோ அல்லது ஆயருக்கு தெரியப்படுத்துவார்களானால் அது நமக்கு அந்த விண்ணப்பத்தை செயலாக்க உதவியாய் இருக்கும்.

சமீபத்தில், அபுதாபிக்கு குடிபெயர்ந்த நமது சபையைச் சார்ந்தவர்களுக்கும் இதேபோன்ற கடிதங்களை நமது திருச்சபை வழங்கியுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

நமது திருச்சபை மூலச் சட்டத்தின், தரங்களைப் பேணுவதற்குத் தாங்கள் ஒத்துழைப்பு வழங்குவதற்கும், புரிந்துகொள்வதற்கும் மிக்க நன்றி.

**சபையாருக்கான வேண்டுகோள்.**

1) தயவுசெய்து எல்லா சபை நிகழ்வுகளிலும் சபையர் பங்கு பெறுமாறு அன்போடு கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள்.

2) சபையார் அனைவரும், தயவுசெய்து , தங்களது சந்தா பாக்கி, 2025 ஆம் ஆண்டு அறுவடைத் திருவிழா பாக்கிகள் (harvest festival dues) மற்றும் இதர பாக்கிகளை உங்களுக்கான blue colour cover ல் வைத்து செலுத்துமாறு அன்புடன் கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள்.

3) தயவுசெய்து ஆலய ஆராதனைகளில், நாமும் நமது பிள்ளைகளும் (தேவாலய நிகழ்வுகளுக்கு இடையூறு விளைவிக்காமல் பார்த்துக் கொள்ளவும்), பயபக்தியோடு பங்குபெற்று, ஆலயத்தையும் றிகிஸிமிஷிபி ஹாலையும் சுத்தமாக நாம் விட்டு செல்லவும், ஆராதனை முடிந்த பிறகு, முழங்கால் படியிடும் மெத்தைகளை (Kneeling pads) அவற்றின் பழைய நிலைக்குக் கொண்டு வந்து பூட்டி வைக்கவும், உதவுமாறு அன்போடு கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள்.

கர்த்தர் தாமே, இந்த புதிய மாதத்தில், நம்மையும், நமது கையின் பிரயாசங்களையும், நமது குடும்பங்களையும், ஆசீர்வதித்து காப்பாராக. ஆமென்.



# அவருடைய பிரசன்னம்

“பரிசுத்த ஆவி உங்களிடத்தில் வரும்போது நீங்கள் பெலனடைந்து… எனக்குச் சாட்சிகளாயிருப்பீர்கள்.” அப்போஸ்தலர் 1:8

## உயிர்த்தெழுதலுக்கும் பெந்தெகொஸ்தேக்கும் இடையிலான பாலம்

கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே, ஏப்ரல் மாதத்தில் நாம் கல்லறையின் வெற்றியைக் கொண்டாடினோம். ஆனால் உயிர்த்தெழுதலோடு கதை முடிந்துவிடவில்லை. உயிர்த்தெழுந்த ஆண்டவர் தம் மக்களைக் கைவிடவில்லை; மாறாக, அவர் தமது தெய்வீகப் பிரசன்னத்தின் மூலம் நம்மோடு இருக்கிறார்.

மே மாதம் ஒரு மகத்தான உண்மையை நமக்கு நினைவூட்டுகிறது: தேவனுடைய பிரசன்னம் சாதாரண விசுவாசிகளை வல்லமையுள்ள சாட்சிகளாக மாற்றுகிறது. கிருஸ்தவ வாழ்க்கை என்பது கடந்த கால நினைவுகளால் அல்ல, நிகழ்காலப் பிரசன்னத்தினால் இயக்கப்படுவது.

## அச்சத்தின் உருவம் : பிரசன்னத்திற்கு முன் பேதுரு

பெந்தெகொஸ்தே என்னும் ஆவியின் அக்கினி இறங்குவதற்கு முன், கரியடுப்பு நெருப்பின் அருகே நின்ற பேதுருவை நாம் பார்க்கிறோம். “பாறை” என்று அழைக்கப்பட்டவர் ஒரு வேலைக்காரப் பெண்ணின் கேள்விக்கு முன்னால் சரிந்து விழுந்தார்.

- மறுதலிப்பு: “அவரை எனக்குத் தெரியாது.”

✷ காரணம்: தெய்வீக அழைப்பைத் தனது சொந்த பலத்தால் நிறைவேற்ற முயன்றது.

✷ விளைவு: பேதுரு இரட்சிக்கப்பட்டார், ஆனால் மௌனமானார்; சீஷராக இருந்தார், ஆனால் தோற்றுப்போனார்.

உண்மை: இன்று பல விசுவாசிகள் பேதுருவை போல் "முற்றத்து கிறிஸ்தவர்களாக" இருக்கிறார்கள். இயேசுவை நேசிக்கிறார்கள், ஆனால் சாட்சி பகர வேண்டிய இடத்தில் பயம் அவர்களை மௌனமாக்குகிறது.

## வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட வல்லமை

அப்போஸ்தலர் 1:8ல், இயேசு ஒரு திட்டத்தை அளிக்கிறார். அவர் பேதுருவுக்கு தைரியத்தைப் பற்றிய பாடப் புத்தகத்தைக் கொடுக்கவில்லை; மாறாக, பிரசன்னத்தின் வாக்குத்தத்தத்தைக் கொடுத்தார்.

1. காத்திருத்தல்: பிரசன்னத்தைப் பெற காத்திருக்கும் இருதயம் அவசியம்.

2. ஈவு: பரிசுத்த ஆவி என்பவர் வெறும் உணர்ச்சி அல்ல; அவர் நமக்குள் கிரியை செய்யும் இறைவர்.

3. மாற்றம்: அந்த வல்லமை (Dunamis) நமது சுய இன்பத்திற்காக அல்ல, சுவிசேஷத்தின் சாட்சிகளாய் நிற்பதற்கே.

## ஒரு மிக பெரிய உருமாற்றம்: பிரசன்னத்திற்கு பின் பேதுரு

சுவிசேஷ புத்தகங்களில் உள்ள பேதுருவையும், அப்போஸ்தல நடபடிகளில் உள்ள பேதுருவையும் ஒப்பிட்டுப் பாருங்கள். நபர் ஒருவரே, ஆனால் வல்லமை வேறானது!

இறைவனின் உடனிருப்பு ஒரு மனிதனை எப்படி மாற்றுகிறது என்பதற்குப் பேதுருவின் வாழ்வே மிகச்சிறந்த சான்றாகும். இறை உடனிருப்பு கிடைப்பதற்கு முன்னால், ஒரு சாதாரண வேலைக்காரப் பெண்ணின் கேள்விக்கு அஞ்சி, இயேசுவை யாரென்றே தெரியாது என்று பேதுரு மறுதலித்தார். அந்த நேரத்தில் அவர் நிழலில் ஒளிந்து கொண்டவராகவும், பயத்தினால் சாபமிட்டுப் பேசியவராகவும் இருந்தார்; அதன் விளைவாக அவர் கசப்பான அழுகையுடனேயே காணப்பட்டார்.

ஆனால், தூய ஆவியின் வருகைக்குப் பின், அதே பேதுரு பல்லாயிரக்கணக்கான மக்கள் முன்னிலையில் துணிச்சலுடன் எழுந்து நின்றார். நிழலில் ஒளிந்தவர் இப்போது வெளிச்சத்தில் நின்று, வேதாகம சத்தியங்களை உறுதியோடு பறைசாற்றினார். இந்த வியக்கத்தக்க மாற்றத்தின்

பயனாக, ஒரே நாளில் மூவாயிரம் பேர் இறைவனை ஏற்றுக்கொண்டு மீட்புப் பெற்றனர்.

தேவ பிரசன்னம் உங்கள் சுபாவத்தை அழிக்காது; அதைத் தூய்மைப்படுத்திப் பயன்படுத்துகிறது.

**உதாரணம்: நெருப்பிலுள்ள இரும்பு**

ஒரு இரும்புத் துண்டு குளிராக இருக்கும்போது கறுப்பாகவும், பலவீனமாகவும் இருக்கும். ஆனால், அதே இரும்பு ஒரு உலைக்களத்தின் அக்கினிக்குள் வைக்கப்பட்டால் ஒரு அற்புதம் நிகழ்கிறது. அது சூடாவது மட்டுமல்ல, தானும் நெருப்பைப் போல பிரகாசிக்கத் தொடங்குகிறது.

- நெருப்பு இரும்புக்குள் இருக்கிறது.
- இரும்பு நெருப்புக்குள் இருக்கிறது.

நீங்கள் தேவ பிரசன்னத்தில் இருக்கும்போது, நீங்கள் செல்லும் இடமெல்லாம் அந்த தெய்வீக பிரசன்னத்தையும் வெளிச்சத்தையும் கொண்டு செல்கிறீர்கள்.

இந்த மாதம், உங்கள் பலவீனங்களை "மறுதலிப்பதில்" இருந்து விலகி, கர்த்தருடைய வல்லமையை "அறிக்கை" செய்ய தேவன் உங்களை அழைக்கிறார்.

- பணியிடத்தில்: அவருடைய பிரசன்னம் உங்களுக்கு ஏற்ற சமயத்தில் பேசும் ஞானத்தைத் தரும்.
- பலவீனத்தில்: அவருடைய பிரசன்னமே உங்களைப் பெலப்படுத்தும்.
- மௌனத்தில்: பயத்தை நீக்கி சாட்சி பகரும் தைரியத்தைத் தரும்.

விசுவாசப் பயணம் என்பது கல்லறையிலிருந்து (இயேசு உயிரோடு இருக்கிறார் என்பதை அறிதல்) மேல்வீட்டு அறைக்கு (அவருக்குள் நாம் உயிர் பெறுதல்) செல்வதாகும்.

- அவருடைய பிரசன்னத்தினால் நிரப்பப்பட்டவர்கள், அவருடைய சாட்சிகளாய் எழுந்து நிற்பார்கள்.

இறைப்பணியில்
உங்கள் ஆயர்.



# His Presence

"But you will receive power when the Holy Spirit comes on you; and you will be my witnesses…" Acts 1:8

There is a deep difference between working for God and walking with God. Many strive to serve, to achieve, and to accomplish spiritual goals, yet overlook the very essence that makes all of it meaningful His presence.

In Acts 1:8, Jesus did not instruct His disciples to immediately go into the world. Instead, He asked them to wait. This waiting was not passive it was preparation. Before the mission came the empowerment; before the witnessing came the indwelling. The promise was clear: You will receive power when the Holy Spirit comes on you. That power was not merely for miracles or bold preaching it was the living presence of God within them.

His presence transforms ordinary people into vessels of extraordinary purpose. The disciples, once fearful and uncertain, became bold witnesses not because of their abilities, but because they carried the presence of the Holy Spirit. They were changed because God was with them.

Even today, the principle remains unchanged. His presence is not an abstract idea or an emotional experience it is a real, active, guiding force in the life of every believer. It strengthens in weakness, gives clarity in confusion, and brings peace in chaos. Without His presence, ministry becomes mechanical, and service becomes burdensome. But with His presence, even the simplest act becomes powerful.

His presence is also what directs our steps. In a world full of noise and distraction, it is easy to lose focus. Yet when we remain connected to Him, we gain discernment. The same Spirit that empowered the disciples also guided them where to go, what to say, and when to act. His presence is not just power for action; it is wisdom for direction.

Moreover, His presence extends beyond personal transformation it propels us outward. Jesus said, "You will be my witnesses to the ends of the earth." His presence is never meant to be contained it is meant to flow through us to others. When we carry His presence, our lives naturally reflect Him through our words, actions, and attitudes.

The call today is not simply to do more for God, but to be more with God. To seek His presence daily, to depend on His Spirit continually, and to allow Him to work through us faithfully. Because ultimately, it is not our strength that changes lives it is His presence in us.

Contributed by
*Mrs.Nancy Augustine*



# வாலிபர்களுக்குச் சில ஆலோசனைகள்

**கர்த்தராகிய ஆண்டவரே, நீரே என் நோக்கமும், என் சிறு வயது தொடங்கி என் நம்பிக்கையுமாயிருக்கிறீர்.** (சங்கீதம் 71:5).

### 8. நல்ல நண்பர்களைத் தேர்ந்தெடுங்கள்

சகோதர சகோதரிகளை, பெற்றோர்களை நாம் தேர்ந்தெடுக்க இயலாது. ஆனால் நம் நண்பர்களை நாம் தேர்ந்தெடுக்கலாம்; வேண்டாமென்றால் அவர்களை விட்டுவிடவும் செய்யலாம் (Sisters and brothers are by chance; but friends are by choice; choose the best.)

திருமறையின் ஆங்கில மொழிபெயர்ப்பில் நீதிமொழிகள்.12:26ம் வசனம் இப்படி இருக்கிறது: A righteous person is cautious in friendship, But the way of the wicked leads them astray (WEB).அதாவது, 'வழுவற்ற நபர் தன்னுடைய நண்பனைத் தேர்வு செய்வதில் கவனமாக இருக்கிறான். ஏனென்றால், ஒழுக்கேடானவன் அழிவிற்கு இட்டுச்செல்வான்' என்பதுதான் அதன் பொருள்.

நண்பர்களில், தற்காலிக நண்பர்கள் (Temporary Friends), தெரிந்த நண்பர்கள் (Informal Friends), நெருங்கிய நண்பர்கள் (Close Friends) என்று மூன்று வகையுண்டு. இதில் இந்த மூன்றாவது வகையான நெருங்கிய நண்பர்கள்தான் நம்முடைய வாழ்க்கையில் குணத்தில் பாதிப்பை ஏற்படுத்துகிறார்கள். (Most of our characters are influenced by our friends).

## எப்படிப்பட்டவர்களைநண்பர்களாக ஏற்றுக்கொள்ளக் கூடாது

*** சோம்பேறியை நண்பனாக ஏற்றுக்கொள்ளாதீர்கள்.**

அவர்கள் தங்கள் வாழ்க்கையையும் கெடுத்து பிறர் வாழ்க்கையையும் கெடுத்துப்போடுவார்கள். “சோம்பித் திரியேல்” என்ற ஔவையின் வார்த்தையை நினைவில் வைத்திருத்தல் நலம்.

*** முன்கோபக்காரனுக்கு நண்பனாக வேண்டாம்.**

“கோபக் காரனுக்குத் தோழனாகாதே”. (நீதிமொழிகள் 22:24).

“ஆத்திரக் காரனுக்குப் புத்தி மட்டு” என்பது தமிழ் பழமொழி.

“மூர்க்க ரோடிணங்கேல்” என்கிறது ஔவையின் ஆத்திச் சூடி.

"Anger is temporary madness" என்பது ஆங்கில பழமொழி; அதாவது கோபம் என்பது தற்காலிக வைத்தியம் என்பதுதான் அதன் பொருள். வைத்தியக்காரனிடம் புத்திசாலித்தனமான நடக்கையை எதிர்பார்க்க முடியாது. முன்கோபக்காரன் எந்த நேரத்திலும் உங்களுடைய நட்பை முறிப்பான். ஆனால் பின்னால் வருந்துவான்; அதனால் பிரயோஜனம் என்ன?

“நூறாண்டு பழகினும் மூர்க்கர் கேண்மை நீர்குள் பாசிபோல் வேர்கொள்ளாதே” (நறுந்தொகை)

(பொருள்: எத்தனை ஆண்டுகள் நட்புடன் பழகினாலும் முன்கோபக்காரனுடைய நட்பு, நீருக்குள் உள்ள பாசி அடியில் வேர்கொள்ளாதிருப்பதுபோல, வேரூன்றாதிருக்கும்).

*** நடத்தை கெட்டவனை நண்பனாக ஏற்றுக் கொள்ளாதீர்கள்.**

"You tell who is your friend, I will tell about you" என்பார்கள். “உன் நண்பன் யார் என்று கூறு, நான் உன்னைப் பற்றிக்கூறுகிறேன்” என்பதுதான் அதன் பொருள். அதாவது. நண்பர்களின் ஆதிக்கம் நமது நடத்தையில் இருக்கும் என்பதுதான் அதன் பொருள்.

யாரிடமாவது கொண்டுள்ள நட்பு, பல சோதனைகளுக்கும் இடர்களுக்கும் காரணியாக இருக்குமானால், இப்படிப்பட்ட நட்பு எதற்காக வேண்டும்?

சாலமோன் ஞானி, “மாயக்காரன் தனக்கு அடுத்தவனைக் (வாயினால்) கெடுக்கிறான்” (நீதிமொழிகள் 11:9) என்றும், ”துன்மார்க்கருடைய ஆலோசனைகள் சூதானவைகள்” (நீதிமொழிகள் 12:5) என்றும் எச்சரிக்கிறார்.

ஆகையால், நடத்தை கெட்டவனுடைய நட்பைவிட்டு விலகுங்கள் அதுதான் சாலச் சிறந்தது

*** பேராசைக்காரனை நண்பனாக ஏற்றுக்கொள்ளாதீர்கள்.**

பேராசைக்காரன் தனது லாபத்திற்காக உங்களை ஏமாற்றவும். காட்டிக்கொடுக்கவும் தயங்கமாட்டான். பேராசை மிகவும் பெரிய பாவம் (Covetousness is a very grave sin). ஆண்டவர் இயேசு "பொருளாசையைக்குறித்து எச்சரிக்கையாக இருங்கள்" (லூக்கா 12:15) என்று கூறுகிறார்.

பவுலடியார், விக்கிரகாராதனையான பொருளாசையை அழித்துப்போடுங்கள் (கொலோ 3:5) என்றுரைக்கிறார்.

*** இறை நம்பிக்கையற்றவனை நண்பனாக ஏற்றுக் கொள்ளாதீர்கள்.**

பவுலடியார் "அவிசுவாசிகளுடன் பிணைக்கப்படாதிருப்பீர்களாக" (2கொரி.6:14) என்று கூறுகிறார். அவர்களால் உங்கள் எண்ணங்களையும் விசுவாசத்தையும் பகிர்ந்து கொள்ள இயலாது. ஒருவேளை அப்படிப் பட்டவர்களுடன் நட்புடன் இருந்தால், உங்களுடைய தாக்கம் அவர்களில் இருக்கவேண்டுமேயொழிய, அவர்களுடைய தாக்கம் உங்களில் மாற்றம் ஏற்படுத்திவிடக்கூடாது.

**எப்படிப்பட்டவர்களை நண்பர்களாக ஏற்றுக்கொள்ளலாம்?**

- உங்கள் உள்ளத்தில் உற்சாகமூட்டுகிறவர்களை நண்பனாக்கிக். (Those Who Stimulate You Mentally).
- உங்கள் உணர்ச்சிகளுக்கு உரமூட்டுகிறவர்களை நண்பர்களாக்கிக் கொள்ளுங்கள். (Those who support you emotionally)
- ஜீவியத்தின் பலமாக உங்களுடைய ஆவிக்குரியி இருப்பவர்களை நண்பர்களாக்கிக் கொள்ளுங்கள். (Those who strengthen you spiritually).

## 9. உறவுகளை மதியுங்கள் பெற்றோர்களுக்குக் கீழ்ப்படியுங்கள்.

நம்முடைய பெற்றோர்களும், உடன் பிறந்தவர்களும் நாம் தேர்ந்தெடுத்தவர்களல்ல அவர்கள் இறைவனால் நமக்களிக் கப்பட்டவர்கள். அவ்வப்பொழுது விரிசல், உரசல், முரண்பாடுகள் வந்தாலும் கடமைகளி லிருந்தும், அன்பிலிருந்தும் விலகவேண்டாம்.



# C.M.S பணியின் வளர்ச்சி

### முதல் தென்னிந்திய ஆங்கிலிக்கன் ஆயர்

1835-ல் கல்கத்தா பேராயத்திலிருந்து மதறாஸ் மாகாணம் பிரிந்து தனிப் பேராயமாயிற்று. பேராயர் தானியேல் காரி (Corrie) இப் புதிய பேராயத்தின் முதல் பேராயராக அபிஷேகம் செய்விக்கப்பட்டார். ரேனியசுடன் பிரிந்து சென்ற அவருடைய ஆதரவாளர்களை மீண்டுமாக ஆங்கிலிக்கன் திருச்சபையுடன் இணைக்க முயன்ற பேராயர், 1836-ல் பாளையங்கோட்டைக்குப் போனார். பேராயரின் முயற்சி வெற்றிபெறவில்லை. ஆயினும் அவர் அங்குச் சென்றபோது, சிறப்பானதோர் நிகழ்ச்சி நடைபெற்றது. ஆங்கிலிக்கன் திருச்சபை முறைமையின்படி, ஜான் தேவசகாயம் ஆயராக அருட்பொழிவு செய்யப்பட்டார். இவ்வாறு அருட்பொழிவு பெற்ற முதலாம் தென்னிந்திய ஆங்கிலிக்கன் ஆயர் இவரேயாவார்.

ஜான் தேவசகாயம் பணியாற்றிய இடங்களிலெல்லாம் சபை மக்களும் பிறரும் இவரை மிகவும் நேசித்தனர். இவரது பொறுப்பிலிருந்த சபைகளெல்லாம் வலிமை வாய்ந்த சபைகளாயின. பெரும் வளர்ச்சியும் கண்டன. தமது வெற்றிகளுக்கெல்லாம் தமது "குரு" வாகிய தரங்கம்பாடியைச் சேர்ந்த டாக்டர் ஜான் தான் காரணம் என்று அவருடைய புகழ்பாடினார். அன்பு, தாழ்மை, பக்தி, பற்றுறுதி, அயலகத்தாரை அரவணைத்தல் போன்ற நற்பண்புகளை அவரிடமிருந்து கற்றுக்கொண்டார். டாக்டர் ஜானுடன் இணைந்து பணியாற்றும் பேற்றினைப் பெற்றதற்காய் வாழ்நாளின் இறுதிவரை கடவுளுக்கு நன்றி செலுத்தினார்.

தமது மகனுடைய உதவியுடன், தொடர்ந்து சபை ஊழியத்தில் வாழ்நாளின் இறுதிவரை ஈடுபட்டிருந்தார். தள்ளாத வயதிலும், நடந்து செல்ல இயலாத நிலையிலும் நாற்காலியில் அமர்ந்திருந்தவாறே கோயிலுக்குத் தூக்கிச் செல்லப்படுவார். ஆராதனையில் அருளுரை ஆற்றுவார். அவருடைய கடைசி ஞாயிறு ஆராதனை வழிபாட்டில், "அன்புக்குரியோரே! கடவுளைச் சோதிக்க வேண்டாம், திருமறையை மதித்துப் போற்றுங்கள், இயேசுவை நேசியுங்கள், தூய ஆவியானவருக்காக வேண்டுதல் செய்யுங்கள்" என மிகவும் சுருக்கமானதோர் அருளுரை ஆற்றினார். அதே வாரத்தில் தமது 78-ஆவது வயதில் மரணமடைந்தார்.

## விரிந்து பரந்த பணி

L.M.S.போலவே C.M.S.-உம் மற்ற பகுதிகளில் தமது பணியை விரிவாக்கம் செய்தது. பணி பல திசைகட்கும் பரவியது. ரேனியஸ், ஷ்னர் என்னும் இரு ஜெர்மானியரும் வந்த ஓர் ஆண்டுக்குப் பின் தாமஸ் நார்ட்டான் (Norton), வில்லியம் கிரீன்வுட் (Greenwood) ஆகிய இரு ஆங்கிலேயர் இந்தியா வந்தனர். மேற்கண்ட நால்வரும் ஒரே சமயத்தில் அருட் பணிக்கெனத் தேர்வு செய்யப்பட்டவர்கள் என்றபோதிலும், ஆங்கிலேயர் இருவரும் ஓராண்டுக் காலம் ஆங்கில குருசேகரத்தில் பணியேற்க வேண்டியதாக இருந்தது. எனவே அவர்கள் 1815-ல் தான் இந்தியாவுக்கு வந்து சேர்ந்தனர்.

கிரின்வுட் வங்காளத்திற்கும், நார்ட்டன் திருவிதாங்கூருக்கும் (கேரளா) போயினர். இக்காலக்கட்டத்தில் கேரளாவில் பணியாற்றி வந்த புராட்டஸ்ட்ண்ட் சபையைச் சார்ந்த ரிங்கல்தோபே என்ற L.M.S. மிஷனெரி மட்டுமே அங்கு இருந்தார். திருவிதாங்கூர் அரசரின் திவானாகப் (முதன்மை மந்திரி) பணியாற்றி வந்த கர்னல் மன்ரோ, ஆங்கிலிக்கன் மிஷனெரி ஒருவரை அங்கு உடனே அனுப்பிவைக்குமாறு வேண்டுகோள் விடுத்தார். அதற்கிணங்க நார்ட்டான் ஆலப்புழை அனுப்பப்பட்டார். திவானாகப் பணியாற்றிய கர்னால் மன்ரோவின் ஆர்வத்தினாலும், சிரியன் திருச்சபைத்தலைவர்களுடன்பேராயர்மிட்டில்டன்நடத்தியபேச்சுவார்த்தையினாலும் அங்குச் சென்ற மிஷனெரிமார் சிரியன் திருச்சபையின் நல்லிணக்கத்துடன் செயலாற்ற முடிந்தது. சிரியன் திருச்சபையுடன் இணைந்து பணியாற்றுவதன் மூலம், அத் திருச்சபையில் சீர்திருத்தங்கள் செய்யக்கூடும் என்றும், மேலும் ஆங்கிலிக்கன் திருச்சபையுடன் சிரியன் திருச்சபையை இணைத்துக் கொள்ளலாம் என்றும் நம்பினார். இருபதாண்டுகளுக்குப்பின் ஆங்கிலிக்கன் மிஷனெரிமாருக்கும் சிரியன் திருச்சபைத் தலைவர்கட்குமிடையே இருந்த நல்லுறவு முறிந்தது. C.M.S. தனித்தியங்கி ஆங்கிலிக்கன் சபைகளை ஏற்படுத்துவதென்ற நிலை அங்கீகாரம் பெற்றது. மிஷனெரிமார் பிற சமயத்தவர் மத்தியில் ஊழியம் செய்ய ஆரம்பித்தனர். படிப்படியாக கேரளாவின் மற்ற பகுதிகட்கும் பணி பரந்து விரிந்தது.

இவ்வேளையில் தான் மிஷனெரிமார் இலங்கைக்கும் அனுப்பி வைக்கப்பட்டனர். சில ஆண்டுக்குப் பின்னரே அருட்பணியாளர் வடதிசை நோக்கிச் சென்றனர். இப்பொழுது ஆந்திரப் பிரதேசம் என்பது வரை பணி செய்யத் தொடங்கினார். இவ் வரலாறு குறித்து 18-ஆம் அத்தியாயத்தில் வாசிப்போம். இந்தியாவில் திருச்சபையின் வளர்ச்சியைக் குறித்து மேலும் அறிந்துகொள்வதற்கு முன்பாகக் கடவுள் இங்கிலாந்தில் எவ்வாறு செயல்பட்டார் என்று அறிந்து கொள்ள வேண்டியது மிகவும் அவசியம் ஆகும்.

# திருமறையை தெரிந்துகொள்வோம்

## எஸ்றா

அன்புக்குரியவர்கள மே மாதம் 2026 மாதத்திற்கான கேள்விகள் எஸ்றா புத்தகத்திலிருந்து எடுக்கப்பட்டுள்ள, இதற்கான பதில்களை இந்த மாதம் 15 ஆம் தேதிக்குள் ஆயருக்கு tamilchurchcsisharjah@gmail.com என்னும் மின்னஞ்சல் வழியாகவும் அல்லது 0507032150 Whatsapp வழியாகவும் அனுப்புமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

1. எருசலேமில் ஆலயத்தைக் கட்டும்படி யூதர்களுக்கு அனுமதி அளித்து கட்டளையிட்ட பெர்சிய ராஜா யார்?
2. பாபிலோனின் சிறையிருப்பிலிருந்து எருசலேமுக்குத் திரும்பிய முதல் கூட்டத்திற்குத் தலைமை தாங்கிய ஆளுநர் யார்?
3. எஸ்றா எதில் தேர்ச்சி பெற்ற வேதபாரகனாக (ஷிநீக்ஷீவீதீமீ) இருந்தார்?
4. எருசலேம் திரும்பிய யூதர்கள் முதலில் எதைக் கட்டி முடித்து, அதில் பலிகளைச் செலுத்தத் தொடங்கினார்கள்?
5. எருசலேம் தேவாலயத்தின் அஸ்திவாரம் போடப்பட்டபோது, சாலொமோனின் ஆலயத்தைக் கண்ட முதியவர்கள் ஏன் அழுதார்கள்?
6. ஆலயத் திருப்பணியைத் தடுத்து நிறுத்துவதற்கு அண்டை நாட்டு மக்கள் பெர்சிய ராஜாவுக்கு எழுதிய கடிதத்தில் என்ன புகார் கூறினார்கள்?
7. ஆலய வேலை தடைபட்டிருந்தபோது, அதை மீண்டும் தொடங்கும்படி மக்களை உற்சாகப்படுத்திய இரண்டு தீர்க்கதரிசிகள் யார்?
8. எந்த பெர்சிய ராஜாவின் காலத்தில் தேவாலயத்தின் வேலை முழுமையாகக் கட்டி முடிக்கப்பட்டது?
9. எஸ்றா பாபிலோனிலிருந்து எருசலேமுக்கு வரும்போது, ராஜாவிடம் ஏன் போர்வீரர்களையும் குதிரை வீரர்களையும் துணையாகக் கேட்கவில்லை?
10. எஸ்றா எருசலேமுக்கு வந்து சேர்ந்தபோது, இஸ்ரவேல் ஜனங்கள் செய்திருந்த மிகப்பெரிய பாவம் என்னவென்று அறிவிக்கப்பட்டது?
11. எஸ்றா எந்த பிரதான ஆசாரியனுடைய வம்சத்தில் வந்தவர்?
12. பாபிலோனிலிருந்து எருசலேமுக்கு எஸ்றாவுடன் வந்தபோது, லேவியர்கள் யாரும் இல்லாததைக் கண்டு எஸ்றா யாரை அழைத்து வரச் செய்தார்?
13. ஜனங்கள் அந்நிய ஸ்திரீகளைத் விவாகம் பண்ணின செய்தியைக் கேட்டபோது, எஸ்றா தனது துக்கத்தை எவ்வாறு வெளிப்படுத்தினார்?
14. எருசலேமுக்குத் திரும்பிய ஜனங்கள் செய்த பாவத்திற்காக அவர்கள் அனைவரும் எத்தனை நாட்களுக்குள் எருசலேமில் கூடிவர வேண்டும் என்று அறிவிக்கப்பட்டது?
15. தேவாலயத்தின் பிரதிஷ்டை பண்டிகையின்போது இஸ்ரவேல் கோத்திரங்களின் எண்ணிக்கையின்படி எத்தனை வெள்ளாட்டுக்கடாக்கள் பாவநிவாரண பலியாகச் செலுத்தப்பட்டன?

## கடந்த மாத வினாக்களுக்கான பதில்கள்

1. எருசலேமின் மதில்கள் இடிக்கப்பட்டு, அதன் வாசல்கள் அக்கினியால் சுட்டெரிக்கப்பட்ட செய்தியும், அங்கிருந்த ஜனங்கள் அனுபவித்த பெரும் துன்பமும். (நெகேமியா 1:34)
2. கிஸ்லேவ் மாதத்தில், சூசான் அரண்மனையில் (பெர்சியத் தலைநகர்). (நெகேமியா 1:1)
3. ராஜாவின் பானபாத்திரக்காரன். (நெகேமியா 1:11)
4. ராஜாவின் முன்னிலையில் துக்கத்தோடு காணப்படுவது தண்டனை அல்லது மரணத்திற்கு வழிவகுக்கலாம் என்பதால். (நெகேமியா 2:12)
5. யூதாவிற்குச் செல்ல அனுமதி, பாதுகாப்பான பயணத்திற்கான கடிதங்கள் மற்றும் கட்டுமானத்திற்கான மரம். (நெகேமியா 2:58)
6. சன்பல்லாத், தொபியா மற்றும் கேஷேம். (நெகேமியா 2:10, 2:19)
7. சில மனிதர்களுடன் இரவு நேரத்தில் இரகசியமாக மதில்களை ஆய்வு செய்தார். (நெகேமியா 2:1216)
8. தேவனுடைய தயவையும் ராஜாவின் ஆதரவையும் அறிவித்து, விசுவாசிகளை ஒற்றுமைப்படுத்துவதன் மூலம். (நெகேமியா 2:1718)
9. தேவனிடம் ஜெபம் செய்வது மற்றும் பாதுகாப்பிற்காக இரவும் பகலும் காவலாளிகளை நிறுத்துவது. (நெகேமியா 4:9)
10. ஏழை யூதர்கள்; கடன் பாரம், பஞ்சம் மற்றும் தங்கள் பிள்ளைகள் அடிமைகளாக விற்கப்படுவது குறித்து புகார் செய்தனர். (நெகேமியா 5:15)
11. அவர் பிரபுக்களையும் அதிகாரிகளையும் கடிந்துகொண்டு, வட்டி வாங்குவதை நிறுத்தி, சுரண்டப்பட்ட சொத்துக்களைத் திரும்பக் கொடுக்கச் செய்தார். (நெகேமியா 5:613)
12. 52 நாட்கள். (நெகேமியா 6:15)
13. நாடுகள் பயந்து, இந்த வேலை தேவனாலேயே செய்யப்பட்டது என்பதை உணர்ந்து தங்களைத்தாங்களே சிறுமைப்படுத்திக் கொண்டன. (நெகேமியா 6:16)
14. வேதபாரகனாகிய எஸ்றா. (நெகேமியா 8:12)

15. அவர்கள் வேத வசனங்களைக் கேட்டபோது தங்கள் பாவங்களை உணர்ந்து அழுதார்கள். (நெகேமியா 8:9)

16. கூடாரப் பண்டிகை. (நெகேமியா 8:1417)

17. தேவனுடைய சட்டத்திற்குக் கீழ்ப்படிதல், அந்நிய விவாகத்தைத் தவிர்த்தல், ஓய்வுநாளைக் காத்தல் மற்றும் ஆலயத்தின் தேவைகளை ஆதரித்தல். (நெகேமியா 10:2939)

18. சீட்டுப் போடுவதன் மூலமும் தலைவர்களை நியமிப்பதன் மூலமும் எருசலேமில் மக்கள் குடியேறுவதை உறுதி செய்தார். (நெகேமியா 11:12)

19. அந்நிய விவாகம், லேவியர்களுக்குக் கொடுக்க வேண்டிய பங்குகளைக் கொடாமல் ஆலயத்தைப் புறக்கணித்தல் மற்றும் ஓய்வுநாளை மீறுதல். (நெகேமியா 13:45, 13:1517, 13:2327)

20. ஆலயத்தைச் சுத்தப்படுத்தினார், தொபியாவை வெளியேற்றினார், ஓய்வுநாள் சட்டங்களைக் கடுமையாக அமல்படுத்தினார் மற்றும் குற்றவாளிகளைத் தண்டித்தார். (நெகேமியா 13:89, 13:1922, 13:25)

கடந்த மாததிற்கான பதில்களை எழுதியவர்கள் அனைவருக்கும் பாராட்டுகளையும் நன்றிகளையும் தெரிவித்துகொள்கிறோம்:

1. Mrs.Kavitha Johnson
2. Mrs.Banu Shyam
3. Dr. Jone Bino
4. Mrs.Punitha Arul
5. Mrs.Baby Jesudoss
6. Mrs. Ahiya

**Children's Corner - Colouring**

1. Jefin
2. Jafan

# Joseph in Egypt

**Key Theme**

Youth in search of a meaningful life.

**Key Passages**

Genesis 37-41

## READ the Word

### Youth in Search of a Meaningful Life

Joseph was only a teenager when his brothers sold him off as a slave. He went through so many ups and downs and ups and downs and ups and downs! But through it all, Joseph always sought to live a meaningful life that would be pleasing to God. He always tried to follow God, no matter how hard it was.

God had a very important purpose for Joseph's life. Read Genesis 37-41 to find out how God used Joseph to save Joseph's family, and people from all over the world, from starving in a terrible famine.

### Hidden Message

Even in very difficult situations Joseph relied on God. Color the shapes with dots, red, and the shapes without dots, blue, to find the hidden message.





**ANSWER:** Trust and obey.

## Learn the Word

Choose the correct word from the bracket and fill in the blanks. Then, memorize the verse!

Use **1 Timothy 4:12** for help.

Don't let ____________ look ____________ on you because
(anyone, some people) (up, down)

you are ____________, but set an example for the believers in
(young, old)

speech, in conduct, in ____________, in faith and in purity.
(hate, love)

## COLOR This

Grab your art supplies and color this picture of Joseph's journey from prison to palace.

Joseph Helps Pharaoh




Don't forget to send your answers to Pastor Uncle by the 15th of this month.

+ 971 50 703 2150

# Birthday & Wedding day Celebrants

**1st May**
MR. S.OBEATH SELWIN
MRS. ANDREA KLEMMY
MASTER. MATHURAVAN
**3rd May**
MRS. JENU JEBALIN JOSE
MR. MARSHAL SELVARAJ
**4th May**
MR. JOHN JOSEPH J.
MR. NELSON.J
MR. GODWIN SANJIV KUMAR
**5th May**
MISS. JENI CHRISELDA
MISS. DARRYL BRYN ELIZABETH
MISS. KEREN SEANNA
MISS. CHRIS BINI B.
**6th May**
MRS. SHARMILA
MR. JENKIN SAMRAJ
MISS. SHAANA LILIYA
**7th May**
MR. NIRMAL JOSE M.
MASTER. O.EDWIN SILAS
MR. RUBAN JEBADURAI
MR. ARON. M
**8th May**
MRS. AHIYA JACOB
**9th May**
MRS. VITHYA SELVI D.
**10th May**
MISS. LENORA LEIZEL WESLEY
MR. JINO JERSON
**11th May**
MASTER. STEVE RYAN
**12th May**
MASTER. DWAYNE MAGNUS
**13th May**
MR. SHALOM SILAMBARASAN
MASTER. ARUL RICHARD
**14th May**
MR. T.THOMAS RAJA
MRS. W.SHEEBA ALWIN
MASTER. JEFRY
**15th May**
MRS. BETSY.S
MISS. RIYA JENISHA
MR. JOHN MARKCUS
MRS. MAGDELIAN
**16th May**
MISS. SMYRNA CAREN M.
MR. JEBASINGH
MR. DAVID STALIN AMOSE
MR. BEN CHELATHAI POVAS
**17th May**
MASTER. ROY SEMARIA
**18th May**
MISS. RHEA HENRITA D
MISS. SANTINA OLIVIA
MR. JEYAKUMAR SOLOMON S.
MR. DAVID PRAKASH GNANIAH
MR. C.MARTIN
MRS. S.BABY
MR. SUJIN BERBIN JOSE
**19th May**
MR. A.HENTRY SAMUEL RAJ
**20th May**
MISS. LANIE SHARON K.
MR. RASU P.
MR. GLORY DOSS.
MR. LEWISH YACUB
MRS. A.JENI PRIYA
MR. VINU JOHNSON
MRS. SHEEBA
**21st May**
MRS. PRIYA SELVABAI C
MRS. KAVITHA PAUL RAJ RAJA
MR. DINESH Y.
MR. FELIXON NELSON NADAR
MRS. A. MARIA

**22nd May**

MRS. PRABHA MOHANDASS

MR. BRAINERD RAJA

MR. PRABIN GEORGE

**23rd May**

MR. CARDINAL LEO

MASTER. SANHEDRIN

**24th May**

MRS. MARY DANIEL

MASTER. RYAN KENNETH

MR. DONALD JMES D'SILVA

**25th May**

MR. WINSTON SURESH

MR. SOLOMON RAJKUMAR R.

MR. SUJIN D.

MR. ALEX VIVIN ARUMAINAYAGAM

MASTER. JASON ANBU

**26th May**

MRS. BRIJITA PRAMILA

**27th May**

MRS. ADELINE SOLOMAN

**28th May**

MISS. SHAMNA

MASTER. JEFFRIN. L

**29th May**

MISS. RAOKHSHNA MAGDEL M.

MR. JENITH D.

**30th May**

MRS. TINA JOSEPH S.

MRS. SUMATHI

MISS. JESIMA J.

MASTER. SAMEUL

## Wedding Anniversary

**1st May**

MR. SELWYN ABRAHAM.M & MRS. JULIE.S

MR. BINO SHALIN & MRS. MAGDELIAN

**4th May**

MR. HENRY VASANTH KUMAR S. & MRS. JANI VICTORIA

**5th May**

MR. MANUEL RAJ JOHN & MRS. RAJALIN JABARANI.R

**6th May**

MR. ALEX JEYARAJ & MRS. ANGELINE

MR. GILBERT RAJ & MRS. JENIBA

**11th May**

MR. DAVID ARUN D. & MRS. GRACY NIRMAL D.

**12th May**

MR. AMAR VENKATACHALAM & MRS. ANITA SAMRAJ

**13th May**

MR. VIMAL RAJKUMAR.S & MRS. BETSY.S

**14th May**

MR. JAMES WESLY & MRS. SHINY SELVARANI WESLEY

**15th May**

MR. RAJESH KUMAR C. & MRS. CELINE VANDHANA

**16th May**

MR. EBENEZER JACOB V. & MRS. SHARMILA

MR. S.SIMEYON & MRS. J.N.BASIL SHALLU

**17th May**

MR. STEPHEN PACKIARAJ & MRS. SELINA

**18th May**

MR. RATHNA SINGH JULIUS S. & MRS. RAJINI VASANTHY. R

**19th May**

MR. JEYARAJ ISREL JOTHIPAUL & MRS. JENEFA GNANAMANI

MR. DAVID STALIN AMOSE & MRS. THAVAMANI

**20th May**

MR. STEPHEN GUNASEKAR & MRS. SYLVIA SEKAR

MR. PRAVEEN JEBAKAR & MRS. TAMIL ELAKYA

**21st May**

MR. DINESH Y. & MRS. VITHYA SELVI D.

**22nd May**

MR. SURESH PITCHAIMANI G. & MRS. REENA PUSHPARANI SURESH S.

MR. LEWISH YACUB & MRS. KIRUBA PRIYADHARSHINI.M

MR. A.HENTRY SAMUEL RAJ & MRS. A.MONIC SHEELA

MR. JOHN MARKCUS & MRS. RUBY JOHN MARKCUS

MR. JACOB SAMUEL & MRS. AHIYA JACOB

**23rd May**

MR. JEYASEELAN JEBARAJ M. & MRS. J.RUBY FATHIMA SEELAN

MR. GLORY DOSS.D & MRS. JANETTE GLORY DOSS

MR. MURALI & MRS. CATHERIN

**24th May**

MR. THOMAS KOILRAJ & MRS. NAJIMA VIJI K.

**28th May**

MR. DAVID PAUL RAJ & MRS. SELVAPRIYA

**29th May**

MR. STALIN JOSE. Y & MRS. KARTHIKA RAJAVEL

## DAILY BIBLE READING MAY - 2026

| Day | Morning | Evening |
|---|---|---|
| மே 1 | மாற்கு 1:1-15 | யோவான் 1:1-14 |
| மே 2 | மாற்கு 1:16-31 | யோவான் 1:15-28 |
| மே 3 | மாற்கு 1:32-45 | யோவான் 1:29-42 |
| மே 4 | மாற்கு 2:1-15 | யோவான் 1:43-2:6 |
| மே 5 | மாற்கு 2:16-28 | யோவான் 2:7-22 |
| மே 6 | மாற்கு 3:1-15 | யோவான் 2:23-3:12 |
| மே 7 | மாற்கு 3:16-30 | யோவான் 3:13-27 |
| மே 8 | மாற்கு 3:31-4:10 | யோவான் 3:28-4:6 |
| மே 9 | மாற்கு 4:11-25 | யோவான் 4:7-21 |
| மே 10 | மாற்கு 4:26-41 | யோவான் 4:22-36 |
| மே 11 | மாற்கு 5:1-15 | யோவான் 4:37-51 |
| மே 12 | மாற்கு 5:16-30 | யோவான் 4:52-5:12 |
| மே 13 | மாற்கு 5:31-43 | யோவான் 5:13-27 |
| மே 14 | மாற்கு 6:1-15 | யோவான் 5:28-42 |
| மே 15 | மாற்கு 6:16-30 | யோவான் 5:43-6:13 |
| மே 16 | மாற்கு 6:31-45 | யோவான் 6:14-28 |
| மே 17 | மாற்கு 6:46-7:4 | யோவான் 6:29-43 |
| மே 18 | மாற்கு 7:5-20 | யோவான் 6:44-58 |
| மே 19 | மாற்கு 7:21-35 | யோவான் 6:59-71 |
| மே 20 | மாற்கு 7:36-8:12 | யோவான் 7:1-15 |
| மே 21 | மாற்கு 8:13-27 | யோவான் 7:16-30 |
| மே 22 | மாற்கு 8:28-9:1 | யோவான் 7:31-45 |
| மே 23 | மாற்கு 9:2-16 | யோவான் 7:46-8:6 |
| மே 24 | மாற்கு 9:17-31 | யோவான் 8:7-21 |
| மே 25 | மாற்கு 9:32-46 | யோவான் 8:22-36 |
| மே 26 | மாற்கு 9:47-10:11 | யோவான் 8:37-51 |
| மே 27 | மாற்கு 10:12-26 | யோவான் 8:52-9:7 |
| மே 28 | மாற்கு 10:27-41 | யோவான் 9:8-22 |
| மே 29 | மாற்கு 10:42-11:4 | யோவான் 9:23-37 |
| மே 30 | மாற்கு 11:5-19 | யோவான் 9:38-10:11 |
| மே 31 | மாற்கு 11:20-33 | யோவான் 10:12-26 |

# வழிபாட்டு தியானப் பொருள்
## மே-2026

| நாள் | திருமறைபாடம் | | தியானப்பொருள் |
|---|---|---|---|
| ஞாயிறு<br>03.05.2026 | பழைய ஏற்பாடு<br>நிருபப் பாடம்<br>நற்செய்திப் பாடம்<br>சங்கீதம் | எரேமியா 31 : 1-6<br>எபேசியர் 3 : 14-28<br>யோவான் 21 : 15-19<br>சங்கீதம் 63 | உருக்கமான அன்புடன்<br>இயேசுவுடன் நட<br>WALK WITH JESUS IN<br>PASSIONATE LOVE |
| ஞாயிறு<br>10.05.2026 | பழைய ஏற்பாடு<br>நிருபப் பாடம்<br>நற்செய்திப் பாடம்<br>சங்கீதம் | எசாயா 41 : 8-13<br>எபிரேயர் 13 : 1-8<br>மத்தேயு 28 : 16-20<br>சங்கீதம் 110 | உயிர்த்த ஆண்டவர் : என்றும்<br>உடனிருக்கும் உறுதி<br>RISEN CHRIST : ASSURANCE OF<br>EVERLASTING PRESENCE |
| ஞாயிறு<br>17.05.2026 | பழைய ஏற்பாடு<br>நிருபப் பாடம்<br>நற்செய்திப் பாடம்<br>சங்கீதம் | எசாயா 59 : 14-21<br>எபிரேயர் 10 : 8-18<br>யோவான் 14 : 15-21<br>சங்கீதம் 143 | தூய ஆவி : உள்ளுறைந்து<br>உடனிருக்கும் வாக்குறுதி<br>HOLY SPIRIT : PROMISE OF<br>THE INDWELLING PRESENCE |
| ஞாயிறு<br>24.05.2026 | பழைய ஏற்பாடு<br>நிருபப் பாடம்<br>நற்செய்திப் பாடம்<br>சங்கீதம் | 1 இராஜாக்கள் 19 :11-18<br>அப்போஸ்தலர் 2 : 1-13<br>யோவான் 20 : 19-23<br>சங்கீதம் 29 | பெந்தக்கோதே ஞாயிறு<br>இரைச்சல் நிறைந்த உலகில்<br>இறைவனின் குரலை<br>உணர்தல்<br>PENTECOST SUNDAY<br>HEARING GODS VOICE IN A<br>NOISY WORLD |
| ஞாயிறு<br>31.05.2026 | பழைய ஏற்பாடு<br>நிருபப் பாடம்<br>நற்செய்திப் பாடம்<br>சங்கீதம் | எசாயா 48 : 12-17<br>எபேசியர் 1 : 3-14<br>யோவான் 3 : 8-16<br>சங்கீதம் 33 | திரித்துவ ஞாயிறு<br>திரித்துவம் : அன்பின் தெய்வீக<br>கூட்டுறவு<br>TRINIRTY SUNDAY<br>TRINIRTY : THE DIVINE<br>COMMUNION OF LOVE |